சுருக்கம்

தூத்துக்குடி மாநகராட்சி – தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை மேம்படுத்தும் திட்டம் இரண்டாம் கட்டப் பணிக்கான நிதிப்பங்கீட்டிற்கு (Funding pattern) ஒப்புதல் மற்றும் இரண்டாம் கட்டப் பணியை ரூ.7.50 கோடிகள் செலவில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை ( இருபதாண்டு ) எண்.12

நாள் 5–3–2010
திருவள்ளுவராண்டு 2041
மாசி மாதம், 21–ம் நாள்

படிக்கப்பட்டது.

1. அரசாணை (இருபதாண்டு) எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1–8–2008
2. அரசாணை (நிலை) எண்.251, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18–12–2009
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.37778/திட்2/2008 நாள் 10–2–2010

---

ஆணை:

தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை சீர்படுத்தி மேம்படுத்தும் திட்டத்தினை மூன்று கட்டங்களாக செயல்படுத்தவும், முதல் கட்டப் பணியை ரூ.698.30 இலட்சம் செலவில் மேற்கொள்ள நிதிப்பங்கீட்டிற்கு ஒப்புதலும், முதல் கட்டப் பணியை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதலும் வழங்கி, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. தூத்துக்குடி மாநகராட்சியில் அமைந்துள்ள பக்கிள் ஓடையின் இருபுறம் வரப்பில் 4.827 கிலோமீட்டரிலிருந்து 2.425 கிலோமீட்டர் வரை 2.402 கிலோமீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் தளம் மற்றும் சிறு கால்வாய் கட்டும் பணிகளுக்கு ரூ.6.00 கோடி, 2009–2010 ஆம் ஆண்டு கோரிக்கை வரி ஈடுசெய்யும் நிதியிலிருந்து மான்யம் விடுவித்து இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், பக்கிள் ஓடையில் 2.4 கிலோமீட்டர் நீளத்திற்கு கால்வாய் வரப்புகளில் ஆர்.சி.சி. தடுப்பு சுவர்

மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பாலங்கள் அமைக்கும் பணிகள் தொடர்பாக ரூ.7.50 கோடிகள் செலவாகும் என்று தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவனத்தால் (TNUIFSL) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், இப்பணியினை மேற்கொள்ள தூத்துக்குடி மாநகராட்சி மன்றம் அதனது தீர்மான எண்.36 நாள் 4-1-2010ல் ஒப்புதல் வழங்கியுள்ளது என்றும், மேலும் கேளிக்கை வரி ஈடுசெய்யும் நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட மான்யம் ரூ.6.00 கோடியுடன் மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ.1.50 கோடி என்ற நிதிப்பங்கீட்டிற்கு ஒப்புதலும், இரண்டாம் கட்ட மேம்பாட்டு பணியை ரூ.7.50 கோடி செலவில் மேற்சொன்ன நிர்வாக ஒப்புதலும் அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று தூத்துக்குடி மாநகராட்சியில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை ரூ.7.50 கோடி செலவில் சீர்செய்து மேம்படுத்த இரண்டாம் கட்ட திட்டப் பணிக்கு நிர்வாக ஒப்புதலும், தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.7.50 கோடியை, கேளிக்கை வரி ஈடுசெய்யும் நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட மான்யம் ரூ.6.00 கோடி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.1.50 கோடி என்ற நிதிப்பங்கீட்டிற்கும் அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம்.
மேலாண்மை இயக்குநர், (TNUIFSL) சென்னை.
ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600 005.
மாநில கணக்காயர், சென்னை- 600 018.
மாநில கணக்காயர், சென்னை-600 018 (பெயர் உறையில்)
உள்ளாட்சி தணிக்கை அலுவலர், மாநில கணக்காயத் துறைத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின்
தனிச்செயலாளர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.2) துறை, சென்னை-600 009.
இ.கோ/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.